ஓம்
சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

# தருமத்தின் குரல்

தத்துவஞானி - ஜனாதிபதி
டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன்

Voice of Virtue of Justice
by Philosopher President
Dr. S. Radhakrishnan

வெளியிடுவோர் :
இளைஞர் அருள்நெறி மன்றம்,
ஞானசம்பந்தன் வீதி,
திருகோணமலை, (இலங்கை.)
ஸ்ரீ லங்கா.

*Published by :*
Ilaingnar Arulneri Mantram,
Gnanasambanthan Street,
Trincomalee - (Ceylon)
Sri Lanka.
1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வெளியீட்டை :

தத்துவஞானி

டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன்

அவர்களின்

நினைவாக வெளியிட்டுச்

சமர்ப்பிக்கின்றோம் !

We are pleased to release

this publication in

Treasured memory of great Philosopher

late

Dr. S. RADHAKRISHNAN.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமத்தின்குரல் தத்துவஞானி

பாரதத்தின் ஜனாதிபதி

# டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

அவர்களின்

# அறிவுரைகள்

★

Voice of Virtue of Justice
Excerpts from addresses
made by late

# Dr. S. Radhakrishnan

Philosopher and President

★

எல்லாம் வல்ல ஈஸ்வரன் - சிவபிரானின்

ஆனி உத்தரத் திருமஞ்சன அபிஷேகத்தின்

சிறப்பு வெளியீடு

A Special Publication
For
Anny Uththara Thirumanjana Maha Abishekam
of
Amighty Eswara Shiva.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1958 - ஆம் ஆண்டில் நிகழ்ந்த நமது நாட்டின் சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொண்ட உலகப்புகழ் தத்துவஞானியும் பாரத் இந்தியாவின் ராஷ்ட்டிரபதி - ஜனதிபதியுமாக விளங்கிய டாக்டர். எஸ். இராதாக்கிருஷ்ணன் அவர்கள், நமது நாட்டின் பாராளுமன்றம் முதல் பல்வேறு நிகழ்ச்சிகளில் பல்வேறு சமூகத் தவர்களின் முன்னிலையில் ஆற்றியருளிய பேருரைகளிலிருந்து வெளிவந்துள்ள தத்துவமும், உண்மையும், பாவனசக்தியும், சாதனையும் நிறைந்த கருத்துக்களே இச்சிறுவெளியீட்டில் வெளி யிடப்பட்டுள்ளது. அக்கருத்துக்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்த்தப்பட்டதாயினும், இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின், அதாவது 1983-ஆம் ஆண்டிலேயே கருத்துரைகளின் தர்மநீதியின் சிறப்பு இன்ப துன்ப நிகழ்வுகளாக உருவெடுத்து வெளிவரத் துவங்கியுள்ளமையை நாம் நமது கவனத்தில் கொள்ளக்கூடியதே.

சில பல ஆண்டுகளுக்கு முன்புதான் மாணவர்களுக்கு பாடத்திட்டம் ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. ஆனல், அதன்பெறுபேறுகளை கற்பிக்கப்பட்டதன் பலாபலனை மாணவர் கள் சமுதாயம் சில பல ஆண்டுகளுக்குப் பின்புதான் அனுப விக்க முடியும். அதேநிலையில்தான், நமது தத்துவஞானி அவர் களின் புத்திமதிகளும் அறிவுரைகளும் இன்று அமைந்து விளங்கு கின்றது. இந்நாட்டில் வாழ்கின்ற சகலருக்கும் யாரும் விதிவிலக் கற்ற முறையில் அனைவருக்கும் பொதுவான சமதான அடிப் படையில் விளங்கும் இவ்வறிவுரை, இந்நாட்டுக் குடிமக்கள், அரசியல்வாதிகள், ஆத்மீகவாதிகள், பொதுநல நிறுவனத்தவர் கள், சமூநலப் பணியாளர்கள், இன்னும் பல வழிகளில் நாட்டின் நலத்தில் அக்கறைகொண்டவர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவச்செல்வங்கள் பட்டதாரிகள், பாமரர்கள், மாளிகையில் வாழ்வோர்கள், குடிசையில் வாழ்வோர்கள் அனைவருக்குமே தத்துவஞானி அவர்களின் அறிவுரைகள் பொதுவுடமையாக விளங்குகின்றது.

ஆனல், அறிவுரைக்குத் தமது நெஞ்சங்களில் எத்தனை பேர்கள் அதாவது எத்தனை மனித ஆன்மாக்கள் இடமளித்துள் ளனர்? என்பதுதான் முப்பது ஆண்டுகளுக்குப் பின் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியை எழுப்பிப் பதில் காணவேண்டியவர்களாக இருக்கின்றோம். இக்காலப் பேச்சாளர்கள், ஒவ்வொரு புத்தாண்டிலும் புத்தாண்டுச் செய்தி வழங்குவோர்கள், பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள், அமைச்சர்கள், வர்ணனையாளர்கள், பணத்தின் மூலம், அதன் செல்வாக்கின் மூலம் பட்டங்கள் பதவிகள் பெற்று வாழ்வில் பிழைப்பு நடாத்துகின்றவர்கள், அரசியலின் பேரால் அக்கிரமங்கள் செய்கின்றவர்கள், ஆத்மீகத்தின் பேரால் தர்மநீதியை மறந்து-தெய்வநீதியை மறுத்து ஆத்மீகத்தின் போர்வையில் இன்பசுகவாழ்வு வாழ்கின்றவர்கள், பணத்துக்காகத் தமது பண்பை இழக்கின்றவர்கள் தர்மத்தின் பேரால் அதர்மத்தை வளர்த்துப் பிரச்சாரம் செய்து வாழும், இத்தனை மனிதப் பண்பு இல்லாத கயவர்கள் கூட்டத்தினைச் சேர்ந்தவர்கள் என்று, மறந்தும் தத்துவஞானி ஜனதிபதி டாக்டர் எஸ். இராதாக்கிருஷ்ணன் அவர்களின் அறிவுரையை நீங்களோ, நாமோ கணிக்கக்கூடாது. அப்படிக் கணித்துள்ளதின் காரணமாகத்தான் இன்று இன்றைய துர்ப்பாக்கியநிலையை நாம் அனுபவிக்கின்றோம். எல்லாரும் அளிக்கின்ற விளக்கங்கள் இருண்டு கிடக்கும் மனிதவாழ்வை ஒளிபெறச்செய்ய முடியாது ஆனல், பொய்யா ஆன்மாக்கள் அளிக்கும் விளக்கம் - அறிவுரைதான் இருண்டுள்ள மனித வீட்டை, நாட்டை, உலகை ஒளிபெறச் செய்ய முடியும் என்ற உண்மையை அறியமுடிகின்றது.

எதிர்கால வாழ்வில் நாமும் நமது நாடும் வழுக்கி வீழ்ந்து விடக்கூடாதென்ற இறைவனின் திருவருட்பெருங்கருணைதான், தத்துவப்பெரியார் இராதாக்கிருஷ்ணன் என்ற பெருந்தகை மூலம் தர்மநீதியின், சமாதானத்தின் அறிவுரை முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நமக்கு நமது நாட்டுக்கு வழங்கப்பட்டது. ஆனல் முறையே பயன்படுத்த நமது நாட்டு அரசியல்வாதிகளும், ஆத்மீகவாதிகளும் தவறிவிட்டனர். அரசியலின், ஆத்மீகத்தின் சமதானம் நாட்டின் ஒரு பகுதியினருக்கு மறுக்கப்பட்டது. பெரும்பான்மை சிறுபான்மை என்ற பேதா பேதங்கள் தலையெடுத்தன. ஆனல், சமதான தர்மநீதியை அரச மட்டத்தில் நடைமுறையில் கொண்டுவர 1958 - ஆம் ஆண்டில் மாண்புமிகு பிரதமராக விளங்கியவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நாட்டுக்கு வழங்கத் தன்னலியன்றளவு முன்வந்து முயற்சி செய்தார்கள். இவ்வுண்மையை எக்காரணங்கொண்டும் மறுக்க முடியாது. அப்படி மறுக்கும் எந்த மனிதனும் - மனிதர்களும் நாகரீகமுடையவர்களல்ல என்பது உண்மை. இயன்றளவு சமதானத்தை, பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நாட்டுக்கு அளிக்க முன்வந்துள்ள அந்நேரத்தில் மாண்புமிகு பிரதமராக விளங்கியவர்களின் நன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளுக்கு மக்களும், ஆத்மீகத் தலைவர்களும், அரசியல்வாதிகளும், மற்றும் பணம்படைத்தோரும், மற்றவர்களை அடிமைப் படுத்தும் எண்ணங்கொண்டவர்களும் பெருமளவில் இடையூறுகள், அழிவுகள், கொலைபாதகங்கள் செய்தனர். அதன் விளைவுகள்தான் இன்று இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் உருண்டு திரண்டு வந்து, இப்பொழுது முப்பது ஆண்டுகளுக்குப் பின் ஆலகால விடம்போன்று எழுந்துள்ளது. இத்தனைக்கும் காரணர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அத்தனை பேருமே என்பதில் ஐயமில்லை. அரசியல் தர்மத்தில் பிழையாது சமதானம் வழங்கப்பட்டிருந்தால், இன்றைய நிலைப்பாட்டில் விரக்தியும் வெறுப்பும், மனச் சஞ்சலமுங்கொண்ட இளைய தலைமுறையினர்களாகிய இளைஞர்கள் சமுதாயம் போர்க்கோலம் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எழுந்திருக்கமாட்டாது. பதிலாக சமதானத்தின் அடிப்படையில் இந்நாட்டுச் சகல இனங்களைச் சேர்ந்த மக்களும் ஆள்வோரும், ஆளப்படுவோரும் என்ற பேதா பேதங்களின்றி சகல இன மக்களும், சிறப்பாக சகல இன இளைஞர்கள் சமுதாயமே ஒருமைப்பாட்டுடன் வீட்டையும் நாட்டையும் மனிதாபிமான இறைமை, அமைதி, சாந்தி, பொருளாதாரத் தன்னிறைவு ஆகியனவற்றில் சிறப்புமிக்கதொரு எழுச்சியை உண்டாக்கி வீட்டையும் நாட்டையும் மகிழ்ச்சியுறச் செய்திருப்பார்கள் என்பதைச் சத்தியமாகக் குறிப்பிடுகின்றோம். தர்ம நீதிக்கு முரண்பட்டவர்கள் முட்டுப்படத்தான் செய்வார்கள். தீமையைச் செய்கின்றவர்கள், தீமைக்கு வழிகாட்டுகின்றவர்கள் ஆகியோருக்கு மட்டும் தண்டனையல்ல, அவர்களுக்கு அவர்கள் ஈனச் செயல்களுக்குப் பக்கபலமாக இருந்தவர்களுக்கும் துணைபோனவர்களுக்கும் அதே தண்டம் - தண்டனை உண்டு என்பதை இன்று நாம் கண்முன் கண்டு அனுபவிக்க முடிகின்றது. தர்மநீதிக்கு என்றுமே அழிவில்லை. என்றுமே முதுமையடைவதில்லை. மரணமடைவதும் இல்லை. தர்மநீதி பண்டும் இன்றும் என்றும் உள்ளபடியே. குருசேத்திரத்தில் நிகழ்ந்த பாரதப்போர் தர்மநீதியை தந்தது பெரும் பாறுங்கல்லைப் பெற்ற புத்தர் பெருமானின் சமதான வாழ்வு தர்மநீதியைத் தந்தது. சிலுவையில் தொங்கி பரமபிதாவின் திருவடியின்பத்தைப் பெற்ற கிறிஸ்த்து பெருமானின் வாழ்வு தர்மநீதியைத் தந்தது. கல்லால் அடிபட்ட நபிகள் பெருமானின் திருவுள்ளம் தர்மநீதியைத் தந்தது. நஞ்சைப் பரிசாகப் பெற்ற தத்துவஞானி சாக்ரட்டீஸ் அவர்கள் தத்துவம் தர்ம நீதியைத் தந்தது. விஷ்ணுராம் கோட்சேயின் வெடி குண்டைப் பரிசாகப் பெற்ற மகான் காந்தியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் உத்தம வாழ்வு தர்மநீதியைத் தந்தது. உலகம் புகழ் தத்துவஞானியும் ஜனாதிபதியுமாக விளங்கியருளிய டாக்டர் எஸ். இராதாக்கிருஷ்ணன் அவர்களின் தத்துவஞான அறிவுரையும் நமக்கு தர்ம நீதியைத் தந்தது.

ஆனால், ஒவ்வொரு காலத்திலும் அவ்வப்பொழுது மனித ஆன்மாக்களின் ஈடேற்றங்கருதி எல்லாம் வல்ல தயாபரனாகிய காலசம்ஹாரப் பெருமான் - இறைவனால் அருளப்பெற்ற நல் வாய்ப்புக்களை - சந்தர்ப்பங்களை கவனத்தில் கொள்ளாது அவமதித்தோம். சுயநல வஞ்சகங்களுக்குத் தாராளமான இடமளித்து இஷ்டம்போல் மனம்போன போக்கில் போகிகளாக வாழ்ந்தோம். இதன் முடிவு அறம்பிழைத்த குற்றத்துக்குத் தள்ளியது. குற்றத்துக்குத் தகுந்த தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது நியாயந்தானே? ''அறம் பிழைத்தோர்க்கு அறமே கூற்றுவன் ஆகும்'' என்ற தர்மநீதியின் கட்டியம் பொய்க்குமா? வருங்கால இளையவர்கள் அதாவது இளைஞர்கள் சமுதாயம் பற்றித்தான் கவலை. அவர்கள் சென்றகாலப் பழுதுகளை மறந்து, இனி எதிர்காலச் சிறப்பினை நினைந்து எழுச்சியுடன் பீடுநடை போட்டுச் செல்ல வேண்டும். சென்றகால நிகழ்கால அனுபவங்களை இளைஞர்கள் தமது நெஞ்சங்களில் கொள்ள வேண்டும். இறைவன் திருவருள் காத்தருளும்.

பணிவன்புள்ள ஊழியன்
இ. சண்முகராசா,
( மன்றச் செயலாளர் )

இளைஞர் அருள்நெறி மன்றம்
திருக்கோணமலை (இலங்கை)
– ஸ்ரீலங்கா –
22-6-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்களின் கவனத்திற்கு

இலங்கை நாட்டைத் தாயகமாகக் கொண்டுள்ள நாம் எமது வாழ்நாளில் நாம் பெற்றுள்ள பலவேறு அனுபவங்கள் மூலம் நமது நாட்டின், மனித இனத்தின் உண்மை நிலைப் பாடுகளை நன்கு அறிந்து விளங்கிக்கொள்ள முடிகின்றது. அந்த அனுபவங்களின் உண்மையின் விளக்கத்தையும் நாம் நன்கு அனுபவித்துக் கொள்ளவும் முடிகின்றது. அதுதான், முக்கியமாக 1958 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நிகழ்ந்த நமது நாட்டின் சுதந்திர தினமும், உலகப்புகழ் தத்துவஞானி-ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன் அவர்களின் இலங்கை விஜயமும்.

நமது நாட்டுக்கு ஏராளமானவர்கள், அதாவது அரசியல் வாதிகள், ஆத்மீகவாதிகள், பொதுநலச் சமூகநலப் பணியாளர்கள் ஆகிய பலர் வந்தார்கள் - வளர்ந்தார்கள் - போனார்கள். ஆனால், எங்கள் வணக்கத்துக்கும் மதிப்புக்குமுரிய உலகப்புகழ் தத்துவஞானி - ராஷ்ட்டிரபதி டாக்டர். எஸ். ராதாக்கிருஷ்ணன் அவர்கள் தாம் இலங்கையில் 1958 - ஆம் ஆண்டில் வழங்கிய ஆத்மீகத் தத்துவஞானமிக்க அறிவுறுத்தல்கள் போன்று யாரும் எவரும் முன்கூட்டியே வழங்கவில்லை. அன்று, தத்துவஞானி அவர்கள் சொல்லிய தீர்க்கதரிசனமான தத்துவார்த்தமிக்க அறிவுரைகள் இன்றைக்கு 30 ஆண்டுகளுக்குப் பின்பு செயலுருப் பெற்று இலங்கைவாழ் மக்கள் யாவருக்கும் எவ்விதமான பேதா பேதங்களின்றி நல்ல படிப்பினைகள் மூலம் வாழ்க்கைக்கு நல்ல அனுபவங்களைத் தந்துள்ளது.

ஆகவே, இனிமேலாவது தத்துவார்த்தமான ஆத்மீகத் தர்மநீதியைப் புறக்கணிக்காது. இலங்கை நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டுள்ள அனைத்து மக்களும் தத்துவஞானி டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன் அவர்களின் அறிவுரைகளுக்கு மதிப்பளித்து வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்து, நமது வீட்டையும் நாட்டையும் துன்பங்கள் துயரங்கள் ஆகிய கொடுமைகளிலிருந்து காத்து வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை நின்று காத்தருளுவாராக. இந்நிலைப்பாட்டில், அரசியல்வாதிகளும், ஆத்மீகவாதிகளும், பொதுநலப் பணியாளர்களும், காந்தீய - சர்வோதய இயக்கத்தினர்களும் மற்றவர்களும் தமது கருத்திற் கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் பேதங்களின்றி, வேற்றுமைகளின்றிப் பணியாற்றி வழிகாட்டி சமதானம், ஒருமைப்பாடு ஆகிய உயர் பண்புகளை வளர்ப்பார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டின் நிகழ்வுகள் அத்தனையும், ஒவ்வொரு காலத்தில் ஏற்படுகின்ற விதியென்று சொல்லி தர்மநீதியிலிருந்து தப்ப முனையாதீர்கள். இது விதியென்றால், அந்த விதியினால் வருகின்ற துன்பங்களிலிருந்தும் விலகி வாழ்வதற்காகத்தான், மதிநுட்பமான தத்துவார்த்தமான அறிவுரையை இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன் சொல்லி அறிவுரை வழங்கினார்கள் தத்துவ ஞானி - ராஷ்ட்டிரபதி டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன் அவர்கள் என்ற பேருண்மையையும் யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாதல்லவா? அண்டங்கள் அனைத்தும் போற்றும் எல்லாம் வல்ல இறைவன், விதியென்கின்ற ஒரு நியதியை வைத்தாலும், அவ் விதியையும் விலக்கி அதிலிருந்து விடுபட்டு வாழவும், மனித வாழ்வுக்கு மதி என்கின்ற நல்லறிவையும் அண்டங்கள் அனைத்தும் ஏற்றிப் போற்றுகின்ற எல்லாம் வல்ல இறைவன் அருளியுள்ளான் அல்லவா? சிந்தியுங்கள். சிந்தனையைச் சாதனையாக்குங்கள். வீடும் நாடும் நலம்பெறும்.

## தீர்க்கதரிசனமிக்க அறிவுரை

1958 - ஆம் ஆண்டு, இலங்கையில் நடைபெற்ற இந்நாட்டுச் சுதந்திரதின விழாவில் கலந்துகொள்ளும் வகையில் இலங்கைக்கு வருகை தந்த உலகப்புகழ் தத்துவஞானியும், பாரதத்தின் (இந்தியா) ராஷ்ட்ரபதியுமாகிய டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன் அவர்கள், இலங்கைப் பாராளுமன்றம், பல்கலைக்கழகம், சமய நிறுவனங்கள், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆற்றியருளிய சொற்பொழிவுகளின் பல கருத்துரைகள் இக்காலத்துக்கும் பொருந்துவனவாக அமைந்திருக்கின்றது. எனவே, இற்றைக்கு முப்பது ஆண்டுகள் காலம் கடந்தாலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே இந்நாட்டு மக்களுக்கும், மக்களின் ஜனநாயக அரசுக்கும், ஆத்மீகத் தலைவர்களுக்கும், பணியாளர்களுக்கும், இளைஞர்கள் சமுதாயத்துக்கும் தீர்க்கதரிசனமிக்க முறையில் அறிவுரை வழங்கியுள்ளார்கள். இவ் வெளியீட்டின் மூலம் தத்துவ ஞானியின் சில கருத்துக்களை முப்பது ஆண்டு களுக்குப் பின்பும் தங்கள் யாவரினதும் மேலான கவனத்துக்கும் சிந்தனைக்குமாகப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சென்ற 30 ஆண்டுகளுக்கு முன்பே, நாட்டினதும்
சகல மக்களினதும் நல்வாழ்வுக்காக
அறிவுரை வழங்கிய, உலகப்புகழ் தத்துவஞானி
டாக்டர் ராதாக்கிருஷ்ணன் அவர்கள்.



Late Dr. S. Radhakrishnan, the world - famous Philosopher who addressed in our Country and to its people for their well - being about 30 years ago.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]



Late Dr. S. Radhakrishnan, the world-famous Philosopher who [illegible] in our Country and to its people for their well-being about 10 years ago.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமத்தின் குரல்

**தத்துவஞானி டாக்டர். எஸ். ராதாக்கிருஷ்ணன்**

''மக்கள் வேறுபட்டாலும் சமூகத்தில் சமத்துவமுண்டெனில் அது ஜனநாயகமாகும். வேறுபட்ட கொள்கையுடையோராயினும் பல்வேறுபட்ட இனத்தவராயினும் அவர்களைச் சமமாகக் கருதுவதே ஜனநாயகத்தின் சாரமாகும் எந்த நாட்டையோ அல்லது தனிப்பட்டவரையோ முக்கியத்துவமில்லை எனக் கழிக்கவோ விலக்கவோ முடியாது. அழகான மலர்கள் கற்களிடையே மலரும். அழகற்றோரிடமிருந்து நற்செயல்கள் பெறப்படுகின்றன. மோசமான குதிரைகள் பந்தயத்தில் வெல்வதுமுண்டு சுருங்கக் கூறின் எல்லோருக்கும், அவர்களிடமுள்ள சக்திகளை விருத்தி செய்யச் சந்தர்ப்பம் அளித்தாலொழிய அவர்களின் உண்மைத் தன்மையை அறிய இயலாது. ஒரு காலத்தில் மகத்துவமுடையவையாய்இருந்த நாடுகள் இப்பொழுது தாழ்ந்து போயின. மற்றும் தாழ்ந்திருந்தவை முக்கியத்துவம் பெற்றுள்ளன. சமவாய்ப்பே இப்பொழுது தேவைப்படுகின்றது.''

"ஒவ்வொரு தனி மனிதனிலும் கண்டுபிடிபடாத வல்லமைகளுள. மனித மகத்துவத்தில் அத்தனிப்பட்டவன் தன் தன்மையை வளர்ச்சியுறச் செய்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்; இதுவே ஜனநாயகத்தின் பாவனைசக்தியாகும். உபயோகத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் அமைப்புக்களுள் ஜனநாயகமே சிறந்தது.''

''சமமாகக் கருதப்படும் பல்வேறு மக்களைக்கொண்ட மனித சமுதாயத்தின் பாவனைசக்தியே ஜனநாயகம். அது ஒரு அரசியல் முறை. சமூகப் பொருளாதாரச் செய்முறை. சர்வதேச வழக்கின் வழிவகையுமாகும். இதுவே உலகமெங்கும் பரவுதல் வேண்டும். சமமாகக் கருதப்படும் பல்வேறு மக்களைக்கொண்ட சமுதாயமே உள்நாட்டு ஜனநாயகமாகும். சர்வதேச அரங்கில் ஜனநாயக முறைப்படி பல நாடுகளின் அடிமைப் பந்தங்களைத் தளர்த்தி சுதந்திரமளிக்க வேண்டும். இவ்விலட்சியங்கள் எம்மை ஒன்று சேர்ப்பன. இலங்கை இப்பெரும் பேறுகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முயற்சி செய்யும் என்பதில் ஐயமில்லை.''

''ஈழம் ஒரு இரத்தினம் செல்வமும், அழகும், இலகுவில் அடக்கியாளக்கூடிய மக்கள் தொகையும் உடையது. உங்களிடம் இயற்கை வளமும் மனித பெலமும் இருக்கின்றன. இவற்றைத் திடத்துடனும் மன உறுதியுடனும் உபயோகிக்கத் தீர்மானித்தீர்களேயாயின் உங்கள் நாடு மாபெரும் நிலையினையடையும்.

இன்று காலை நாம் சுதந்திர சதுக்கத்திற் கண்டவை உங்களின் இளைஞர்களின் உயர்ந்த தன்மையை உணர்த்துகின்றன. தகுந்த வழிகாட்டலும் தலைமையும் அவர்களுக்குத் தேவை. நிலப்பரப்பிலும் பார்க்க மக்களின் உளத்தன்மையே ஒரு நாட்டிற்குப் பெரிது. எங்கள் வளர்ச்சியைத் தடைசெய்யும் இனத்துவேஷம், சமய வேற்றுமை ஆகிய இறந்தகாலத்தின் பிடியிலின்றும் நாங்கள் விடுதலை பெறவேண்டும்."

"எங்களுக்குப் பெரும் பாரமாய் இருப்பவற்றை அகற்றி எதிர்காலத்தை மறைக்கும் முகிற்கூட்டத்தை விலக்க உறுதியுடைய மனோநிலையை நாம் வளர்த்தல் வேண்டும். நாம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் சத்தின் வளர்ச்சிக்கும் வேலை செய்தல் வேண்டும். ஒழுக்க அடிப்படை இன்றி பொருட் செல்வமோ அல்லது அரசியல் அதிகாரமோ தழைக்க முடியாது. மனத் தூய்மையும் துறவு மனப்பான்மையும் உடையோரே பாரைத் தாங்கி நிற்பர். "சந்தோ பூமிம் தபஸா தாரயந்தி."

உங்கள் நாட்டில் நீங்கள் முன்னேற்றமடைந்து மனித வர்க்கத்தின் நலனிற்காக உதவுவீர்கள் என்பது எம்முடைய திடமான நம்பிக்கையாகும். சுதந்திரத்தைக் கொண்டாடும் இந் நாளில் அதன் பலன்களைத் தழைக்கச் செய்யவும், பெருக்கவும், பாதுகாக்கவும் உங்கள் உயிரை அர்ப்பணஞ் செய்வது உங்கள் கடமையாகும். அத்துடன் நீதி, சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய சிறந்த குறிக்கோள்களை வருங்காலச் சந்ததியாருக்கு உணர்த்துவதும் உங்கள் கடமையாகும்."

"குறிப்பிடக்கூடிய ஒப்புமையுடைய உறவுள்ள மதத்தையே பௌத்தரும் தமிழரும் உடையர். சில கிழக்கு நாடுகளில் இறைவனை சிவபுத்தன் உருவத்தில் வணங்குவர் புத்தர் பெருமானின் வாழ்க்கையும் போதனையும் இந்தியர் மனதில் மிகவும் பதிந்துள்ளன. இன்று சமயத்தில் மாசு படர்ந்துள்ளது. உலகத்தின் பல பாகங்களிற் சமய உணர்ச்சி குன்றியுள்ளது. சமயம், பகுத்தறிவுக் கொவ்வாத சில பிரேரணைகளை மேற்கொள்ள வேண்டுவதனால் விஞ்ஞான சாத்திரத்திற்கு மாறுபட்டதாயும் நியாயத்திற்கப்பாற்பட்டதாயும் கருதப்படுகின்றது. சாதி, தீண்டாமை, இனவேறுபாடு, போர் போன்ற மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களைச் செய்யச் சமயம் வேண்டுவதனால் அறிவியலுக்கு மாறானதாகக் கருதப்பட்டுக் குறை கூறப்படுகின்றது. ஒழுக்கவியற் சார்பாகவோ அல்லது சமூகச் செயலுடனோ சமயம் சேர்க்கப்பட்டதனாலும், மனிதனை ஒரு ஜீவான்மாவாகக் கருதாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Philosopher : **Dr. S. Radakrishnan**
Thanking for the Reception given
at Jaffna 1958.



தத்துவக் கலாநிதி அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில்
அளிக்கப்பட்ட வரவேற்பின்போது, அவர்கள் தமது
இரு கரங்களையும் கூப்பி அனைவருக்கும்
வணக்கம் தெரிவிக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும் அது பொருட்படுத்தப்படவில்லை. சமூகத்தில் நிலவும் தீயபழக்க வழக்கங்கள் ஆகியவற்றினின்றும் உண்மைச் சமயம் வேறுபடுத்தப்படவேண்டும் என்பதைக் கூற விரும்புகிறேன். மனித இயற்கைக்குச் சமயம் அத்தியாவசியமானது.''

''வாழ்க்கையின் முடிவு, அதன் நிலையாமை, வரலாற்றுத் தன்மை, சாரம், மரணம், வியாதி அல்லது மூப்பு, இறப்பு, பிணி ஆகியவற்றையே எல்லாச் சமயங்களும் வற்புறுத்துகின்றன. இவ்வுலகில் நிலையானவை ஒன்றுமில. மாபெரும் நாகரீகங்கள், சிறந்த கலை இலக்கியச் சிருஷ்டிகள் யாவற்றிற்கும் முடிவிருக்கிறது.''

''குரோதம், அநீதி, ஆகிய விதைகளைத் தம்முள் அடக்கியிருப்பது போல் அழிவின் விதைகளும் உண்டெனக் கொள்ளல் வேண்டும். ஆத்மீகத்தையும் அறநெறியையும் அலட்சியம் செய்து சடப் பொருளினை மதிப்பின், எங்கள் எதிர்காலம் அபாயகரமானது. பேரவா, கோபம், பேதமை ஆகியவற்றை அகற்ற வேண்டுமென்றே புத்தர்பெருமானும் கூறுகின்றார். குரோத சக்தியினால் அமைதி பெற முடியாது. எங்கள் பஞ்சசீலக் கொள்கை நேசத்திற்கு வழியாகும். கட்டுப்பாடுடைய ஒழுக்கத்தாலும் தன்னலமின்மையாலும் அமைதியைப் பெறலாமே யொழியச் சொற்களால் மட்டும் அடையமுடியாது.''

''மனத்தின் கண் உள்ள வியாதியே உலகத்தைத் துன்புறுத்துகின்றது. ஆத்மீகக் குழப்பத்தின் பெறுபேறே சத்தின் முறையின்மை. மனித இயற்கையின் புரட்சிகரமான மாற்றமே எங்கள் இப்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்குற்ற வழியாகும்.

''மனிதன், உண்மை மனித சீவியம் செய்யவேண்டுமெனின் அவன் தன் விவேகத்தின் குறையைத் தீர்ப்பதே முக்கியம். வேற்றுமையிலிருந்து ஒற்றுமையடையும் நிலையை மனித வாழ்வில் அடையவேண்டும் விவேகத்தினால் கண்ட இருமைகள், பிளவுகள், துயரங்கள் முதலாயினவற்றுக்கு அப்பாலுள்ள ஞான ஒளியைப் பெறுவது மனிதனின் குறிக்கோள். இவையே விவேகத்தின்பால் எழுந்த பிரச்சனைகள். யாவற்றிற்கும் விடை கொடுப்பன. விவேகத்தின் குறைதீர்த்த பின்பே சமயப் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியும்.''

''இறைவன் மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் உண்டென்பதை எல்லாச் சமயங்களும் எடுத்துக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைப் பெறு" என்கிறது உபநிடதம் புத்தர் சொல்கிறார், "பேதமையை நீக்கி மெய்யறிவைப் பெறு." மறுபிறப் பெய்தினால்தான் ஒருவன் இறைவன் சந்நிதியை அடையலாம், என யேசு பெருமான் மொழிந்தார். ஈசன் எங்கள் மருங்கில் உள்ளார் என்னும் உணர்ச்சியுடன் நாம் வாழ வேண்டும் என முகமது நபி உபதேசஞ் செய்தார்.

"ஏழையும் செல்வனும், சக்தியுடையோனும் பலமற்றவனும், ஒருவருக்கொருவர் உதவும் அடிப்படையில் சர்வதேசக் கொள்கை அமைக்க முயற்சித்தல் வேண்டும். நாம் நம் அயலாரின் காவலர். இயந்துரோபாயங்களை ஆக்குவதனை விட்டு, வாழ்க்கையில் புதிய நோக்கத்தை விருத்தியடையச் செய்தல் வேண்டும் அறநெறியால் எழும் நோக்கும் ஒற்றுமையும் இன்றி அரசியலொற்றுமையும் பொருளாதார ஒற்றுமையும் அமையாது."

"சர்வதேச ஒற்றுமையேற்படுத்த ஆத்மீக அடிப்படை வேண்டும். எங்கள் பிரச்சனைகள், போர், பொருளாதார அரசியற் பிரச்சனைகள் அல்ல. அவை ஒழுக்க ஆத்மீகப் பிரச்சனைகள். இக்கால சமூகத்தின் ஒழுங்கீனத்தை முறைப்படுத்தற்கு தர்மம் என்னும் நெறியைப் பயபக்தியுடன் கவனித்தல் வேண்டும் மனிதனின் உட்கருத்தின் உருவத்தை மாற்றியமைத்தலுடன் வெளி நோக்கும் திருந்துதல் வேண்டும்.

சாந்தி, ஒற்றுமை, அமைதி காண பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் அறிவுக்குச் சில சொற்கள்

''நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது.''

''உலக சகோதரத்துவம் என்ற கொள்கைக்கு இன வேறுபாடு விரோதமானது. நம்முடைய உபதேசங்களைக் கேட்டு உலகம் நம்மை மதிப்பதில்லை; நம்முடைய செயல்களைக் கண்டே மதிக்கிறது.''

''மதம்'' என்ற வார்த்தையின் பகுதிப் பொருள் அது எல்லோரையும் ஒன்றுபடுத்தும் ஓர் சக்தி என்பதே ஆகும். ஆனால் ஒவ்வொரு மதமும் தான் கண்டதே முடிவு. தன் கொள்கைகளுக்கு ஈடே இல்லை என்று சாதிப்பதால் ஏற்படும் பலன் ஒவ்வொரு மதமும் மற்றொன்றைத் தன் நேர் எதிரியாகப் பாவிப்பதுதான்.''

''தற்கால உலகில் மனக் கோளாறுகள் அதிகரிப்பதற்குக் காரணம், எண்ணங்களுக்குச் சரியான லட்சியம் எது என்று வெறுமைச் சூழ்நிலையே ஆகும்.''

''மக்கள் திரளில் நிறைந்து நிற்கும் அனுபவம் என்பது உணர்ச்சிக்கு அடிமைப்படுவது என்பதன் வேறு பெயரேயாகும். எனவே மக்கள் திரளை ஆட்டிவைக்கும் தந்திரம் தெரிந்தவர்கள் நல்ல செல்வாக்கைப் பெற்றுவிடுகிறார்கள். மக்கள் திரளை ஆட்டி வைக்கும் தந்திரத்தை அறியும் சூதாட்டந்தான் இன்றைய அரசியல் வாழ்க்கை.''

''தொழில் வளர்ச்சியை மையமாகக்கொண்ட நாகரிகம், பொதுமக்கள் திரளால் பாதிக்கப்படும் சமூகம், இவற்றின் இடையே சிக்கிய தனி மனிதன், தன் தனிமனிதப் பண்பையே இழந்துவிடுகிறான். ஒரு மனிதனைச் சூழ்ந்துள்ள வஸ்துக்களே அவன் வாழ்க்கையை உருவாக்குகின்றன.

★ ★ ★

'' நிலப் பரப்பிலும் பார்க்க மக்களின் உளத்தன்மையே ஒரு நாட்டிற்குப் பெரிது. எங்கள் வளர்ச்சியைத் தடை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத் துவேஷம், சமய வேற்றுமை ஆகிய இறந்த காலத்தின் பிடியினின்றும் நாங்கள் விடுதலே பெறவேண்டும்.''

''ஒழுக்க அடிப்படையின்றி பொருட் செல்வமோ அல்லது அரசியல் அதிகாரமோ தழைக்க முடியாது. மனத் தூய்மையும் துறவு மனப்பான்மையும் உடையோரே பாரைத் தாங்கி நிற்பர்.

''சந்தோ பூமிம் தபஸா தாரயந்தி''

–தத்துவஞானி – ஜனாதிபதி - டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PREFACE.

I have great pleasure to reproduce a series of remaarkble addresses rendered by the most reputed philesopher and the President of Bharath Dr. S. Radhakrishnan during his official visit to Sri Lanka to Participete in the Independence Celebration in the year 1958 in the midst of various communities. His addresses were tainted with philosophy, truth fervent power and practical ideologies. Even though his addresses were rendered thirty years ago and more specially in the year 1983 after the elapse of twenty five years his concepetions based on the Virtue of Justice have culminated of mixed joyful and sorrowful incidents or events which have come to our precaution as the case might be.

It lies in the fact that several years ago as per regulations of the pupils educational syllabus. the teachers imparted then and thereafter the aftermath of it. the pupils are in a position to cherish and nourish such experience As to this standpoint our reputed philosopher' s advices and instruction are being comprehended today. His particular addresses are being understood as the basis of peace and harmony of all concerned irrespective of any exception to the rule. His competent lectures are meant in common to the citizens; politicians, spiritualists, social service personnels, teachers, students, graduates, illiterates, people live in mansions and cottages and others concerned of this country as a whele.

However the question arises as to how many of us give vent to his invaluable gem of thoughts? In this context we are liable to raise the points at issue concerning to his lectures even it was effected thirty years ago It is quite obvious in each and every new year speakers, editors, critics, ministers, graduates, opulents, earning members, political leaders of emporium usurpers in the name of virtue and such inhuman mentality groups who have failed and ignored the significant lectures of the most competent Philosopher President Dr. S. Radhakrishnan cannot be taken into consideration



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ipsefacto. That is the very reason we have been placed in a miserable predicament of experience today. In such a shoddy situation one can' t enlighten the mankind.

Under all circumstances one should not deviate from the future life as to his invaluable lectures based on peace, harmony, and virtue of Justice and Equity, after all it was done about thirty years ago to our country. Whereas our country politicians and spiritualists have grossly failed and neglected to implement. Partial treatment is done to a certain section of Politicians and spiritualists. Minority discrimination has taken its deep root. But on the other hand in conformity to the pacific and equitable and justifiable advisory lecture, of Dr. S. Radhakrishnan in 1958 the then Prime Minister analysed and diagnosed and made every possibie and concerted efforts to transform Sri Lanka into a peaceful socilist Democracy. This fact cannot be denied or defied in any event. If it is done on the part of mankind it is not meant culture whereas in contravention the so called politicians spiritualists, well to do men and exploiters have resorted to promote animorsity, obstructions, destructions. atrocities and killings at random which we have witnessed in recent times after the elapse of twenty years and that within the duration of five year peried since 1983 everything is turned out to be venomous and detrimental. If and when everything is done in conformity to the Virtue of Justice there went be arisen any iota of frustration, discontent, malice, hatred and other allied evils. Even the present day youths of any community would not have taken up arms against the State. Just because everything has gone against the Justice we are in a miserable plight today. If there is no discuriminatory attitude prevails in this country there will be unity, solidarity, economic stability, self sufficiency, peace. harmony and sovereignity which I verily Affirm and vouchsafe. Those who go against virtue of Justice evil doers and its sponsors are not only liable for punishment but also those who aid and abet and the partakers also receive the same. Such instances we have witnessed in recent times. After all Virtue of Justice is immortal always virgin and will stand forever. Even Maha Bharatha Kuru-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

chethra war gave Virtue of Justice, Even Lord Buddha gave peace and Virtue of Justice. Crucified Christ gave Virtue of Justice. Even Mohamed who was stoned gave the same thing and the great thinker Socrates 'who was hemlock did give Virtue. Mahatma Gandhi who was assasinated by Godse gave the same attribute. And even the renowned philosopher President Dr. S Radhakrishnan did give philosophy and Virtue of Juetice.

In conclusion whereof we have discarded the wisdom of saints, seers and philosophers from time to time. we have given place to the spirit of Jealousy, arrogance, selfishness and egoism and behaved to our whims and fancies and as a consequence we are driven into the Vortex of Vice and Injustice. There is an adage when Virtue goes wrong and it is turned out to be a demon, We are rather aggrieved over the future youths. It is time now to give up all the pest evil acts and turn a new leaf to lead the nation and must keep all things at all times in their minds and do good.

May God protect them.

Humble Servant.

**E. Shanmugarajah**

(Secretary)

Illaingnar
Arulneri mantram
Trincomalee
22. 6. 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Gratitude and Felicitation

Ilaingnar Arulneri Mantram of Trincomalee, as part of its services, is pleased to present this publication, compiling some of the valuable addresses made by late Dr. S. Radhakrishnan, the world – famous philosopher and President of Bharath India to the people of our Country.

We also take this opportunity to express our sincere gratitude and thanks to M/s. D. K. Gasperson and C. M. Ganeshalingam who have assisted us to translate these addresses from Tamil to English, Mr. T. B. Antony who beautifully typed the script of this publication, and readily and willingly undertakes the typing work of this Mantram without any remuneration, Mr. J. S. Pathinathar who extended his whole - hearted support to present this publication, and the Management and Staff of New Leela Press, Colombo who have beautifully printed this publication.

" May God Bless All "

Thanks.

**ILAINGNAR ARULNERI MANTRAM**

Trincomalee (Sri Lanka)
22 nd June, 1988.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## For your information

We, who hail Sri Lanka as our Mother-Land through the variety of experiences gathered during our life - time have come to understand the true state of our population. We are also able to enjoy the fruits of the understanding accrued as a result of these experiences. It has been eventful. particularly the Independence Celebrations of our country in 1958 and the visit of Dr. S. Radhakrishnan, the world famous Philosopher and Former President of the Republic of India to Sri Lanka.

Many visitors, Statesmen, Religious Savants, Social Workers and Dignitaries have come to this land, preached and returned but no one has, however, contributed so much for the well being and guidance of the citizens as Dr. Radha krishnan through his lofty speeches and dis-courses delivered to us in 1958. Even after 30 years of his visit the pracitcal application of his advices had paved way for us to lead good life.

Therefore, even now we should not deviate from the spiritual and moral values. The citizens of Sri Lanka who accalaim this land as their own should heed and practice the preachings of Dr. Radhakrishnan in their day to day life so that the Almighty God would stand by us to eradicate the miseries and sufferings in our midst, May the Politicians, Religious and Social leaders, Gandhian and Sarwodays workers bearing in mind the noble values work towards peace and unity.

Do not find escape in the idea that all events that have occurred in our country are due to fate. If every happening is due to fate, it is to avoid the crulties of this fate that 30 years ago Dr. Radhakrishnan had instilled in our minds the eternal truth which cannot be denied or forgotten. Has not the Almighty God revered throught the Universe, although the process of fate is in existence, blessed us with the discerning intelligence? Therefore, think and act so that the Home and Country at large would accure benifits.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In the year 1958 during the Independence celebration of Sri Lanka the most reputed and erudite Philosopher President of Bharath Dr. S. Radhakrishnan participated and subsequently paid his visit to the Parliament of Sri Lanka, University of Colombo, Religious Institutions and Jaffna where he rendered his fascinating speeches and ideologies which would be befitting to the present day. Even it passed more than thirty years and before that his remarkable speeches are meant to the people of Sri Lanka People's Democratic Government Religious Heads, Public Servants and to the youths as Voice of Prophecy at all times.

We have taken a great pleasure and rare opportunity to publish his authoritative speeches after the elapse of thirty years for public enlightenment.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Voice of Virtue of Justice

Philosopher: **Dr. S. Radhakrishnan**

If there is a traits of equality in a community despite discrimination or discrepancy therein lies the true spirit of Democracy. Parity of status is the criterion of Democracy in spite of differences of opinion and diversity of races whether it be a country or an individual as a whole significant factor cannot be discarded. Even pretty flowers bloom in the midst of rock. Good actions are derived from non beautiful lots. Even the worst horses win races in competition. Just to put it in a nut shell until and unless opportunity is granted to their energies one cannot comprehend the true attribute of them. The grandeur that was with renowned countries are no more now. Whereas backward countries have reached its zenithal status. What is needed today above all other things is the equality of opportunity.

There are latent powers which are not discovered by a single man. To devolop one's talents opportunity must be created. This is the real facet of Democracy. After all Democracy is very vital on point of constitutional set up and its activities:

Fair and equitable parity of status to various communities in a state is the efficacy of Democracy. That is a constituional process. Implementation of social economy. That is the "modus operandi" of International outlook. It should be devolved all over the universe. Internal Democracy means inclusion of diverse communities as equals. In an international rostrum democratic methods to be maintained as freed on free from all enslavement. Such attributes pave way for unity and co-operation. Undoubtedly sri Lanka will maintain such an attribute internally as well as extraneously.

"Elam means gem there is a controlling power to harness the wealth and natural scenic beauty amid the people. There is configuration and strength of men. Your country can reach a zenithal position provided you have mental and physical powers to achieve. This morning at the Independent Square



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I have witnessed that the Youths have higher attributes. Proper guidance and legeoinary are very much need to them. People's mentality is of paramount importance unlike the extent of a country. In such a situation we are liable to be liberated from the past racial discrimination as well as religious discrepancies.

We have to set aside all onerous things and to unravel the hideout of future cloud we have to nurture our strength of mind. we have to work hard for unity and vitality. The power of self or governmental power can't outgrow without morality. Purity of heart and clarity of mind can forbear the universe "SANTO POONIM THAPASA THARAYANTHI".

Our fervent hope is that you have'nt go forward in every aspect for the human welfare and assistance. It is your sacrificial duty to preserve the value of Freedom and its augmentation and security. It is your bounden duty to enlighten your future generation to promote justice, liberty and fraternity. The Buddhists and the Tamils have well noted our unique affinity of religion. In certain oriental countries Siva-puthan is worshipped, Even Buddha's life and teachings are installed in the hearts of Indians. Today religion is tainted with defect. There is retrogression of religious thoughts and feelings in certain parts of the Globe. Just to surmount certain proposals contravention of religion discrimination and science are said to be beyond Justice and Equity. Racial differences, untouchability and belligerent attitude are pernicious acts in terms of religion which is meant contrary to knowledge or wisdom.

Just because of ethical or social activity interwoven with religion and that man is not considerd as Jiva Atma in all aspects. I wish to emphasise and wish that true religion is to be sorted out for social evil habits and customs. Reigion is indispensable to mankind.

All religions emphasise the end of life temporality historic standpoint essence death, disease or elderliness and nativity. Nothing is permanant in the universe. There is an end to great civilisations, fine arts and literature.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Just like the seeds of enmity, injustice are suppressed in vanity so with the ease of the seeds of destruction. It is rather dangerous in the near future failing to observe spiritualism and morality and give due consideration to materialism. Even Lord Buddha has mentioned to eradicate greed or avarice, indignation and ignorance. Calmness cannot be obtained by envious power. Panchayat policy leads to the path of love. Calmness can be obtained by means of self control, conduct and self- confidence but not on mere words." Mental ailment agonises the world aftermath of the spirittaul somersault is non vitality. The reformation of our mentality can only solve the present day pressing problems.

If a man wants to lead manly life he has to control the fast going which is of vital importance. we have to segregate from discrimination and to attain the state of unity. It is the higher aim of mankind to obtain wisdom free from cleavages and afflication. These are the problems. arisen out of just going. After solving this fast going problem one can solve the regigious problems.

All religions point out the divinity in the mind of man. Upanished says "Set aside ignorance and obtain wisdom" Even Buddha says to set aside ignorance and obtain spiritual knowledge Even Jesus has said that unless man is born again he can't enter the kindom of God. Even prophet Mohamed has taught that God is in us and that we should lead the life of sentiment.

The principal of Internationalisn must be endeavoured to be formed for aid despite rich or poor or strong or weak or otherwise. We are the sentinels of our neighbour. Instead of preparing weapons one has to create new ideas and policies to be devoloped. Without the ethical attitude and its unity there can't be any politics. economic unity and stability.

Just to promote Universal unity spiritualism is the basic need. Our problems are not war, ecouomy or political but moral and spiritual problems only. We have to observe vortex of virtue to get rid of present day social disorder and due consideration must be paid. There is a need to reform the inner man as well as external objectives.

**Let us Pray for Peace Unity and Harmony**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Few Words for your Knowledge

**"It may be difficult to gain confidence, but we cannot escape from the necessity of possessing confidence"**

**"Racial discrimination detrimental to the conception of World Brother-hood The world does not respect us by listening to our preachings. It respects our deeds it witnesses.**

**" 'Religion' is also a factor meant to unite the humanity. Each religion is, however, trying to establish, that its path only is the ultimate and has no comparison this leads to: conflicts among all religions"**

**"The increase in mental dis-orders in the present world is due to the lack of ideal way of thinking"**

**"The experience prevalent among the masses is another name for slavery to emotions. Therefore, the un-scruplous persons having been aware of this situation achieve wide popularity, The present day Politics is the art of being aware of this gamble of exploiting the mass mentality"**

**"The Man sand-wiched between the civilisation of Industrial Growth and the Humanity influenced by mass thinking loses his individuality. It is the factors which surround him mould his life"**

**"It is the state of mind of the people which is needed more for a country than the extent of land. we should free ourselves from the past racial hatred and religious differences detrimental to the progress of humanity"**

**"Without discipline neither the economic prosperity nor political authority can survive Only those who possess purity of mind and detached attitude can lead the world'**

*" SANTHO POOMIM THAPASA THARAYANTHI "*

Dr. S. Radhakrishnan
*Philosepher & President.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறவழியின் – தர்ம நீதியின் அடிச்சுவட்டில்

''அல்லல் அனைத்தும் அறிவு இல்லாமையால்தான் ஏற்படுகின்றது''

என்பதுதான் கிரேக்கப் பேரறிஞர் - தத்துவஞானி சாக்ரட்டீஸ் அவர்களின் பிரதம சீடன் அறிஞர் பிளேட்டோ போதிக்கும் சித்தாந்தம். (All evil is due to lack of Knowledge) ஒரு மனிதன் எது சரியானது என்பதைக் கண்டறிந்து விட்டான் என்றால் அஃது அவனைத் தீயவழியில் நடக்க ஒண்ணுதபடி ஆக்கிவிடும்.

நல்லதன்மை என்பது மனிதரைக் கடந்து தனித்ததொரு தத்துவமாக நிற்கிறது. தக்க முறையில் பயிற்சி தரப்பட்டால், ஒவ்வொருவரும் தாமே அதனைக் கண்டு பிடிப்பார்கள்; கண்டு பிடித்து அதன் வழி ஒழுகுவார்கள். அவர்களே தக்க ''தத்துவ ஞானி'' - அரசனுகத்'' (Philosopher - King) தலை எடுக்க முடியும். ''தீமைகள் செய்தல், பொய்மைக்கு இடமளித்தல் ஆகாது'' என்ற நீதிநெறி இந்நாட்டுக்கு மட்டும் பொருந்தும் நெறி அல்ல இவ்வுலகம் முற்றும் ஏற்கத் தகும் நீதிநெறிச் சட்டமாக (Mora- Law) விளங்குகின்றது. ''இத்தகைய நீதிநெறி நிலைகள் ஈசுவரனினும் மேலானவை'' (''Moral Standards are Superior even to god'') என்பது பிளேட்டானிஸம் தெரிவிப்பது.

ஓர் இலட்சிய நாட்டை (Ideal State) மிகச் சிறந்தோரே ஆள முன்வருகின்றனர். பயிற்சியாலும் இயற்கைத் திறந்தாலும் ''மிகச்சிறந்தோரில் மிகக் கவனமாகத் தெரிந்தெடுக்கப்படுபவரே'' (The Choicest of the best) ஆட்சிப் பொறுப்பினை ஏற்பர் தத்துவஞானி - ஆட்சியாளரே எல்லாருக்கும் உயர்ந்த வருணத்தினர். அவர்கள் ஆணையை ஏனையோர் நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றக் கடமைப்பட்டவராவர்.

இரேக்க தத்துவஞானி சாக்ரட்டீஸ் அவர்களின்
சீடர் பிளேட்டோ.

★ ★ ★

''காற்றிலே – தீபம் அணையாது அடக்கமாகக் காப்பதுபோல்
நம்மை அடக்கத்தினுல் காத்துக்கொள்வது மேலான நற்செயல்''

–முதுமுனிவர் ராஜாஜி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானிய மக்களிடம் இருப்பது உழைப்பு ஒன்றுதான். உழைப்பாலே இன்றைய உலகில் உயர்ந்தவர்கள் ஜப்பானியவர்கள். உழைப்பு, விளையாட்டு, வீரம் இவற்றில் தனி அக்கறை எடுத்துக்கொண்டு செய்வார்கள். அவை பற்றித் தெருவிலும், மற்ற இடங்களிலும் பேசினாலும் அரசியலைப் பற்றி அவர்கள் பேசுவதோ சர்ச்சை செய்வதோ கிடையாது. அதற்கென்றே இருக்கும் தலைவர்களிடம் விட்டு விடுகிறார்கள். இரண்டாவது உலக யுத்தம் நமக்குப் பேரனுபவம். அழிவு வேண்டாம்.

ஜப்பானியப் பல்கலைக் கழகப்
பேராசிரியர் திரு. டஹாரா.

★ ★ ★

ஆக்கபூர்வமான வழிகளில் நமது இளைஞர் சமுதாயத்தின் சிந்தனையும், செயலும் இன்னும் போதிய அளவுக்கு ஈடுபடவில்லை. என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இதற்கு அந்த இளைஞர்கள் மட்டும் காரணமல்ல என்பது என் கருத்து. அறிந்தோ – அறியாமலோ நமது முன் சந்ததியினர், பொறுப்பான காரியங்களிலிருந்து இளைஞர் சமுதாயத்தை ஒதுக்கி வைத்தே வந்ததன் விளைவுதான் இது.

"இளைஞர்களிடம் பொறுப்பைக் கொடுங்கள். அப்போது தான் அவர்கள் பொறுப்போடு நடந்துகொள்வார்கள். அப்படியின்றி, இளைஞர்கள் பொறுப்பற்றவர்கள் என்று சொல்லிக் கொண்டே இருப்பதில் அர்த்தமில்லை."

" இளைஞர் சமுதாயத்தைத் தக்கவர்களாகத் தகுதியுடையவர்களாக ஆக்குவது, நாட்டின் அறிவுடை பெருமக்களும், கல்வி போதிக்கும் போதனபீடங்களும், ஆசிரியர்களுமே இத்தகைய ஒரு ஆக்கபூர்வமான நன்னிலையை உருவாக்கிச் செயற்படுத்தி நாட்டின் பொறுப்புக்களுக்குரிய நற்பெருமக்களாக இளைஞர் சமுதாயத்தை வளர்த்து இப்பாருக்கு வழங்கும் கடமை அரசுக்கே சார்ந்தது "

"இளைஞர் சமுதாயமும் தம்மை நன்னெறிக்கு ஈடுபடுத்தி வாழ்வினைத் தகுதியுடையதாக்கித் தக்கவர்களாக வளர்ந்து மானிட சமுதாயத்தின் மேன்மைக்கு எதுவெல்லாம் தேவையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றையெல்லாம் சாதனையாக்கி வளமான வாழ்வுக்குத் தம்மையும் நாட்டையும் தகுதிப்படுத்திக் கொள்வது ஒவ்வொரு இளைஞனின் தலையாய கடமையாகின்றது."

– சர். சி. பி. இராமசாமி ஐயர்

(தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவின்போது, *15.5.1959* ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில் ஆற்றிய உரையிலிருந்து கிடைத்த கவனத்துக்குரிய கருத்துக்கள்)

★ ★ ★

''நோயினால் பீடிக்கப்பட்டு அவஸ்தைப்படுகின்ற ஒருவனுக்கு முதலில் தேவைப்படுவது அவனது கொடுநோய் குணமடைவதற்குரிய வழிமுறைதான். அதைவிடுத்து, அவனுக்கு இனிமையான சுவைகொண்ட உணவுப் பதார்த்தங்களைக் கொடுக்க முடியுமா? கொடிய நோயினால் அவஸ்தைப்படுகின்ற அம்மனிதன் இனிய பதார்த்தங்களைச் சுவைக்கவே முடியாது.

"பசித்தவனுக்கு ஆண்டவன் ஒரு துண்டு உறட்டியாக வரவேண்டும். பசித்துள்ள நேரத்தில் அவனிடம் சமய தத்துவங்களைச் சொல்ல முடியுமா?

– பகவான் அரவிந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவஞானி - ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன் அவர்கள் 1958 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இலங்கையின் சுதந்திரதின விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் ஆத்மீகவாதிகளுக்கும் அறிவுரைகள் வழங்கியபின் பாரதத்திற்குத் திரும்பும்போது, பிரதமர் உயர்திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களிடமிருந்து விடைபெறுகின்ற காட்சி.



Late Dr. S. Radhakrishnan, Philosopher and President bidding Good Bye to the late Premier Hon'ble S. W. R. D. Bandaranayke before returning to Bharath (India) after participating In the Independence Day Celebrations of Sri Lanka in 1958 and addressing the citizens, politicians and spiritualists of this Country.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியும்! வாழ்த்தும்!!

திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்றத்தின் பணிகளுள் ஒன்ருக வெளிவந்துள்ள இவ்வெளியீட்டில், உலகப்புகழ் தத்துவஞானியும் பாரதத்தின் (இந்தியா) ஜனதிபதியுமாக விளங்கியருளிய டாக்டர் எஸ். ராதாக்கிருஷ்ணன் அவர்களால் நமது நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்ட அறிவுறைகளில் சிலவற்றை இங்கு வெளியிட்டுள்ளோம். தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவிய நமது அன்புக்குரிய திருவாளர்கள் டி. கே. கஸ்பெசன் அவர்களுக்கும், சி. எம். கணேசலிங்கம் அவர்களுக்கும், மன்றத்தின் பணிகளை வேண்டும் போதெல்லாம் அன்புள்ளத்துடன் ஏற்றுத் தட்டச்சில் அழகாகத் தட்டி அதாவது டைப் செய்து உதவியருளும் நமது அன்புக்குரிய திரு. ரி. பி. அன்ரனி அவர்களுக்கும், இவ் வெளியீடு வெளியிடுவதற்குப் பக்கத்துணையாக அமைந்து உதவியருளிய திரு. ஜே. எஸ். பத்திநாதர் அவர்களுக்கும், மன்றத்தின் இவ் வெளியீட்டை அழகிய முறையில் அச்சிட்டு உதவிய கொழும்பு நியூ லீலா அச்சகத்தின் நிர்வாகத்தினருக்கும், அச்சக ஊழியர்களுக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

"எல்லாம் சிவன் செயல்"

வணக்கம்.

இவ்வண்ணம்

இளைஞர் அருள்நெறி மன்றத்தினர்

திருக்கோணமலை (இலங்கை)
திருவள்ளுவர் – விபவ ஆண்டு,
ஆனித் திங்கள் 8 – ஆம் நாள்
22–6–1988.

நியூ லீலா அச்சகம், 182, மெசஞ்சர் வீதி, கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org